# கோமரங்கடவெல பிரதேச சபை

# திருகோணமலை மாவட்டம்.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 நவம்பர் 03 வரை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1989 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிகள் | |
| (i) அத்தியாயம் 07 இன் 161 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் மாதாந்த வருமானம் மற்றும் செலவினக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) அத்தியாயம் 08 இன் 169 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 1646 | மீளாய்வாண்டிற்கான சபையின் வாகன ஓட்ட அட்டவணை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருமான நிர்வாகம்

### 2.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | - | - | - | - | - | - |
| (ii) | வாடகைகள் | 231 | 231 | - | 249 | 249 | - |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 29 | 30 | - | 26 | 26 | - |
| (iv) | வேறு வருமானங்கள் | 605 | 258 | 600 | 402 | 467 | - |

### 2.1.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

பல்வேறு கட்டளைகளின் கீழ் மாவட்ட நீதவான் நீதி மன்றத்தால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளர் / மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 600,000 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களைப் பெற சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. சபையினால் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப் பணங்களை கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளபடி யானது | 2010 முரண் | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளபடி யானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 5,956,930 | 2,601,231 | 3,358,699 | 3,429,280 | 3,158,427 | 270,853 |
| ஏனையவை | 6,006,000 | 11,178,806 | (5,172,806) | - | 1,466,684 | 1,466,684 |
| உப மொத்தம் | 11,962,930 | 13,780,037 | (1,817,107) | 3,429,280 | 4,625,111 | (1,195,831) |
| மூலதனச் செலவினம் | - | - | - | - | - | - |
| முழு மொத்தம் | 11,962,930 | 13,780,037 | (1,817,107) | 3,429,280 | 4,625,111 | (1,195,831) |

## 2.3 மனித வள முகாமைத்துவம்

### 2.3.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | பற்றாக்குறை / மேலதிகம் |
|---|---|---|---|
| பதவிநிலைத் தரங்கள் | 01 | - | 01 |
| இரண்டாம் தரங்கள் | 06 | 03 | 03 |
| ஆரம்ப தரங்கள் | 09 | 06 | 03 |
| மொத்தம் | 16 | 09 | 07 |

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.4.1 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 651,435 ஆகும்

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) நிலையான சொத்துக்கள்

(ஈ) களஞ்சியம்

(உ) பதவியணியினர் கடன்கள்

(ஊ) வருமான சேகரித்தல்